03.09.2025 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண். 49 /2021 ) திரு.ராஜ்.

1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை-

1) நான் தாக்கல் செய்துள்ள பிராதில் சொத்து விவரத்தில் 1 ம்தபசில் குமரெட்டியபுரம் கிராமம் தற்போதைய புது நத்தம் சர்வே எண்.394/2 என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பழைய சர்வே எண்.256/2 என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் பட்டா எண்.37 ல் பழைய சர்வே எண்.256/2 என்று காட்டப்பட்டுள்ளது என்றால் பட்டா எண் எனக்கு தெரியாது பழைய சர்வே எண்.256/2 என்று போடப்பட்டுள்ளது அது காளியம்மாள் பெயரில் உள்ளது என்றால் உள்ளது முழு சொத்திற்குரிய பழைய சர்வே எண்.256/2. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் கணினிப்பட்டா எண்.444 அதில் என்ன சர்வே எண் போடப்பட்டுள்ளது என்றால் சர்வே எண்.394/2 உள்ளது .அது வழக்கிற்கு பின்னிட்டு எடுக்கப்பட்ட பட்டா எண்ணாகும் என்று சாட்சி கூறுகிறார். அது **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ.1 முத்துராஜ் பெயரில் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கிற்கு பின்னிட்டு ஏற்பட்டுள்ளது. பிராதில் பழைய கதவு எண்.91 என்றும், புது கதவு எண்.1/160 என்று பிராதில் காண்பித்துள்ளேனா என்றால் பிராதில் கண்டுள்ளது ஆனால் எண் ஞாபகமில்லை. மின் இணைப்பு எண்.SC.No.189 என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மின்இணைப்பு எண்.SC.No.189 காளிராஜ் பெயரில் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆரம்பத்திலிருந்தே அவர் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். காளிராஜ் பெயரில் மின்இணைப்புக்கு செலுத்தப்பட்ட ரசீதுகள் எண்ணம். 44 **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது மின் இணைப்பு சர்வீஸ் முத்துராஜ் பெயருக்கு மாற்றம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். முத்துராஜ் பெயரில் செலுத்தப்பட்ட ரசீதுகள் எண்ணம்.6 **பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) வீட்டுவரி ரசீதுகளும் சண்முகவேல் என்பவரின் பெயருக்குமாற்றம் ஏற்பட்டுள்ளது என்றால சரிதான். அதற்கு முன்பு சுப்பையா ஆசாரி பெயரில் வீட்டு வரி ரசீது உள்ளது என்றால் சரிதான். சுப்பையா ஆசாரி பெயரிலிருந்து திருமதி.காளியம்மாள் பெயருக்கு மாற்றம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். காளியம்மாள் பெயரிலிருந்து முத்துராஜ் பெயருக்கு மாற்றம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். முத்துராஜ் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீதுகள் எண்ணம் 31 மேற்படி 3 நபர்கள் பெயரில் ஏற்பட்ட ரசீது

**பி.வா.சா.ஆ. 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. முத்துராஜ் பெயரில் ஏற்பட்டியிருப்பது வழக்கிற்கு பின்னிட்டு ஏற்பட்டதாகும். எனது தகப்பனார் பெருமாள் ரெட்டியார் பெயரில் பத்திரம் இருந்து வருவதாக சொல்லுகிறேன் என்றால் சரிதான். எனது பெயரிலோ, எனது தகப்பனார் பெயரிலோ பட்டாவோ, தீர்வை ரசீது, மின் இணைப்பு ஏற்படவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் பெயரில் உள்ள ஆவணங்களில் உள்ள சொத்தை தான் வழக்கு சொத்தாக காண்பித்துள்ளேன் என்றால் எங்களுக்கு தெரியாமல் மாற்றியுள்ளார்கள். பிரதிவாதிகள் பெயரில் உள்ள சர்வே எண், தீர்வை ரசீது,மின் இணைப்பு ஆகியவை எனது பெயரில் இருப்பதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மின் இணைப்பு வைப்பீட்டு தொகை செலுத்தியதற்கான ரசீது வைத்துள்ளேனா என்றால் இல்லை. பிராதில் மின் இணைப்பு டெப்பாசிட் தொகை செலுத்தியுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் இல்லை சொத்து விவரத்தில் விவரித்துள்ளேன். சொத்து விவரத்தில் சொல்லப்பட்டுள்ளதற்கான ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. நிலம் என்னுடையது பத்திரம் வைத்துள்ளேன். பிராதில என்னுடைய இடத்திற்கு மின் இணைப்பு பெற்று டெபாசிட்தொகை செலுத்தி மின் இணைப்பு பெற்றுள்ளதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல.

3) எனது தகப்பனார் பெயரில் உள்ள வா.சா.ஆ.1 ல் உள்ள சொத்திற்கும் பிராது சொத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியின் சொத்தை மோசடி செய்யவேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது வழக்கு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும், தபசில் சொததிற்கும் எவ்வித சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
03.09.2025.